NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 August 2018

## மொத்தம் 4,624 பேர் இவ்வாண்டின் தேசிய தின விருதைப் பெறுகிறார்கள்;

# தெமாசெக் விருதை பெறுகிறார் டோனி டான்

இவ்வாண்டு தேசிய தினத்தை முன்னிட்டு அரசாங்கம் வழங்கும் விருதுகள் பட்டியலில் முதல் இடத்தைப் பெறுகிறார் முன்னாள் அதிபர் டோனி டான் கெங் யாம்.

நாட்டின் ஆக உயரிய விருதான 'தி ஆர்டர் தெமாசெக் (முதல் வகுப்பு)' விருதை அரசாங்கம் அவருக்கு வழங்கியுள்ளது.

1940ஆம் ஆண்டில் பிறந்த டாக்டர் டான், 2011ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று சிங்கப்பூரின் ஏழாவது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னதாக, 1979ஆம் ஆண்டில் மக்கள் செயல் கட்சி சார்பில் அரசியலில் அடி எடுத்து வைத்த டாக்டர் டான், பொதுத் தேர்தலில் வென்று செம்பவாங் தனித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன் டாக்டர் டான், அரசாங்கத்தில் நிதி, தற்காப்பு, கல்வி ஆகியவற்றின் அமைச்சராகவும் பாதுகாப்பு மற்றும் தற்காப்புக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் பின்னர் 1995 முதல் 2005ஆம் ஆண்டு வரை துணைப் பிரதமராகவும் பணியாற்றினார்.



(இடமிருந்து) திரு ஆர். ஜெயச்சந்திரன், திரு ராஜன் கிருஷ்ணன், திருவாட்டி ஜூதிகா ராமநாதன், திரு ஆர். ராஜாராம்.

2005 முதல் 2011ஆம் ஆண்டு வரை சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டு நிறுவனத்தின் தலைமை இயக்குநராகவும் தேசிய ஆய்வு அறநிறுவனத்தின் தலைவராகவும் சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

விருது பட்டியலில் அடுத்த நிலையில் மேன்மைதங்கிய சேவை விருதை சிங்கப்பூர் தொழில்நுட்ப, வடிவமைப்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவர் திரு பிலிப் இங்கும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக அறங்காவலர் குழுவின் முன்னாள் தலைவர் திரு வோங் நிட் லியோங்கும் பெறுகிறார்கள்.

இவ்வாண்டு தேசிய தின விருதுப் பட்டியலில் 60 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

அவர்களில் பொதுச் சேவை நட்சத்திர (பதக்கப்பட்டை) விருது பெறுகிறார் வாம்போ சமூக மன்ற மூத்த குடிமக்கள் செயற்குழுவின் தலைவர் திரு ஷேக் அஸிஸ் ஷேக் முஹைதீன்.

அதற்கு அடுத்த நிலையில் பொதுச் சேவை நட்சத்திர விருது பெறுகிறார்கள் சிராங்கூன் சமூக மன்ற இந்தியர் நற்பணிச் செயற்குழுவின் தலைவர் திரு காளிமுத்து பொன்னுசாமி, மொரிஷியஸுக்கான சிங்கப்பூரின் தூதர் திரு ஆர். ஜெயச்சந்திரன், இந்து ஆலோசனை மன்றத்தின் தலைவர் திரு ராஜன் கிருஷ்ணன், மனிதவள அமைச்சின் வேலையிட காயத்துக்கான இழப்பீட்டு மருத்துவ மன்றத்தின் தலைவர் பேராசிரியர் வீரசிங்கம் பிரேம்குமார், பொதுப் போக்குவரத்து மன்ற உறுப்பினர் திரு கரம்ஜித் சிங்.

பொது நிர்வாக தங்கப் பதக்கத்தைப் பெறுகிறார் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அலுவலகத் தலைமை நிர்வாகியான திருவாட்டி ஜூதிகா ராமநாதன்.

வளர்தமிழ் இயக்கத்தின் தலைவரான 55 வயது திரு ஆர். ராஜாராமுக்கு பொதுச் சேவை விருது கிடைத்துள்ளது.

தமக்குக் கிடைத்திருக்கும் விருது பற்றி கருத்துரைத்த மொரிஷியஸுக்கான சிங்கப்பூரின் தூதர் திரு ஆர். ஜெயச்சந்திரன், 74, வெளியுறவு அமைச்சால் தேசிய தின விருதுக்கான பரிந்துரைப்பைக் கௌரவமாகவும் சிறப்புச் சலுகையாகவும் கருதுகிறேன். எனது பணிக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரத்தை விட இதை எனது தேசிய சேவைக்குக் கிடைத்திருப்பதாகக் கருதுகிறேன்," என்றார் இந்து அறக்கட்டளை வாரியத்தின் தலைவருமான இவர்.

இந்து ஆலோசனை மன்றத்தின் தலைவரான 67 வயது திரு ராஜன் கிருஷ்ணன், "பல இன, பல சமய ஒற்றுமையை மேம்படுத்த இந்து ஆலோசனை மன்றம் மேற்கொண்ட முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரமாக இந்த விருதைக் கருதுகிறேன். மேலும் இந்தப் பெருமை எனக்கு மட்டும் உரியது அல்ல. என்னுடன் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் தொண்டர்களுக்கும் இந்த விருதைச் சமர்ப்பிக்கிறேன்," என்றார்.

"பொது நிர்வாக தங்கப் பதக்கம் கிடைத்திருப்பதைத் தன்னடக்கத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். நாட்டுக்குச் சேவையாற்ற பொதுச் சேவைத் துறையில் எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பாக்கியமாகக் கருதுகிறேன்," என்றார் திருவாட்டி ஜூதிகா ராமநாதன்.

"இந்த தேசிய தின விருது எனக்கிடப்பட்ட பணியில் என்னுடன் பயணித்த, எனக்கு தோள் கொடுத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் கிடைத்த அங்கீகாரமாகவே கருதுகிறேன். எனினும் செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது. அனைவரின் ஆதரவோடு அந்த பயணத்தை வெற்றிகரமாகக் கடப்போம் என்ற நம்பிக்கையை இவ்விருது தருகிறது. தமிழை நேசிப்போம், தமிழில் பேசுவோம்," என்றார் திரு ராஜாராம்.

இவ்வாண்டு தேசிய தின விருதுகளை மொத்தம் 4,624 பேர் பெறுகின்றனர். அவற்றில் 4,041 பொது விருதுகளும் 583 ராணுவ விருதுகளும் அடங்கும்.

2,305 பேர் நீண்டகால சேவை விருதைப் பெறுகின்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.